# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 60 — 1973 මැයි 18 වැනි සිකුරාදා — 1973.05.18

60 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு மே மாதம் 18 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 475 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | 479 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 479 | எல விற்பனைகள் .. .. .. | — |
| ஆதன விற்பனையும், குத்தகை விற்பனையும் .. . | 480 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*சிறு கைத்தொழிற்றிணைக்களம்*

*மாவள்ளி மா வழங்குவதற்கான விலைக்கூற்றுக்கள்*

மாதமொன்றுக்கு 25 தொன் மாவள்ளி மா வழங்குவதற்கான விலைக்கூற்றுக்கள், கொழும்பு, பிரிஸ்டல் வீதியிலமைந்துள்ள ஹேமாஸ் கட்டிடத்திலிருக்கும் சிறு கைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் கோரப்படுகின்றன.

2. விலைக்கூற்றுக்கள் பின்வருவனவற்றைக் குறிப்பவையாயிருத்தல் வேண்டும் :—

(அ) மாதமொன்றுக்கு வழங்கப்படக் கூடிய தொகை.

(ஆ) மருதானை, டீன்ஸ் வீதியிலுள்ள நூல் விற்பனை நிலையத்தில் ஒப்படைப்பதற்கு தொன் ஒன்றிற்குரிய வீதம்.

(இ) திணைக்களத்தின் பசையிடும் பொறித் தொகுதியெதிலாவது ஒப்படைப்பதற்குத் தொன் ஒன்றிற்குரிய வீதம். (பசையிடும் பொறித் தொகுதியின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்).

(ஈ) ஒப்படைக்க முடியாவிடின் களஞ்சியத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்குத் தொன் ஒன்றிற்குரிய வீதம்.

3. விலைக்கூற்றுக்கள் யாவும் 1973.06.07 காலை 10 மணிக்கோ அதன்முன்போ அவரைச் சென்றடையுமாறு, தலைவர், கேள்விச் சபை, சிறு கைத்தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், கொழும்பு 1 என முகவரியிடப்பட வேண்டும்.

4. கடித உறையின் இடது மேல் மூலையில் "மாவள்ளி மாவுக்கான விலைக்கூற்றுக்கள்" என எழுதப்பட வேண்டும்.

5. மேற்கொண்டு வேண்டப்படும் விபரங்கட்குத் தயவு செய்து சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழிற் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(4)/35)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.05.08.

5-390—18.05.73 ந் திகதிய வர்த்தமா ? இல. 60

### முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I : தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

***எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,***
***அரசாங்க அழுத்தகர்.***

***அரசாங்க அச்சுத் திணைக்களம்,***
***கொழும்பு,***
***1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.***

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

**நூல் கொண்டு செல்வதற்கான விலைக்கூற்றுக்கள்**

கொழும்பு 1, பிரிஸ்டல் வீதியிலமைந்துள்ள ஹேமாஸ் கட்டிடத்திலிருக்கும் சிறுகைத்தொழிற்றிணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரினால், வியாங்கொடை, துல்கிரிய, களனி, மட்டக்குளி, கந்தானை, ஜா-எல, கல்கிசை ஆகிய இடங்களிலுள்ள நூல் விற்பனை நிலையத்துக்கும், மருதானை நூல் விற்பனை நிலையத்திலிருந்து கொழும்பு புகைவண்டிப் பண்டக் கொட்டிலுக்கும் நூல் கொண்டு செல்வதற்கான விலைக்கூற்றுக்கள் கோரப்படுகின்றன.

2. விலைக்கூற்றுக்கள் கீழ்க்காணும் முறையிலமைதல் வேண்டும்:—

(அ) வியாங்கொடையிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(ஆ) துல்கிரியாவிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(இ) களனியிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(ஈ) மட்டக்குளியிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(உ) கந்தானையிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(ஊ) ஜா-எலயிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(எ) கல்கிசையிலிருந்து மருதானை நூல் விற்பனை நிலையத்துக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

(ஏ) மருதானை நூல் விற்பனை நிலையத்திலிருந்து கொழும்பு புகயிரதப் பண்டக் கொட்டிலுக்குச் செல்லும் மைலொன்றுக்குள்ள வீதம்.

3. விலைக் கூற்றுக்கள் தலைவர், கேள்விச் சபை, சிறுகைத் தொழிற்றிணைக்களம், ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1 என முகவரியிடப்பட்டு 07.06.1973 காலை பத்து மணிக்கோ அதன் முன்போ அவரைச் சென்றடையுமாறு அனுப்பப்படுதல் வேண்டும்.

4. கடித உறையில் இடது மேல் மூலையில் "நூல் கொண்டு செல்வதற்கான விலைக்கூற்றுக்கள்" என எழுதப்பட வேண்டும்.

5. மேற்கொண்டு வேண்டப்படும் விபரங்கட்குச் சிறு கைத்தொழிற் பணிப்பாளருக்கு விண்ணப்பிக்கவும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1-(5/50)
சிறுகைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1,
1973.05.08.

5-391—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60.

---

**சுகாதாரப் பகுதி**

*வர்ண புகைப்பட அச்சீடுகள் வழங்குவதற்கு கேள்விகள்*

கொழும்பு 10, டீன்ஸ் வீதி, 385, தொழுநோய் தடை இயக்க அதிகாரியால் பிரசித்திபெற்ற வர்த்தக ஸ்தாபனங்களிலிருந்து அல்லது தனிப்பட்டவர்களிடமிருந்து கீழ் குறிப்பிட்டவைகள் வழங்குவதற்கான கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பெருப்பிக்கப்பட்ட வர்ணபுகைப்பட அச்சீடுகள், ஒவ்வொன்றின் பிரமாணம் 7" × 5" யும் 9½" × 7" இவைகளின் மூலப்படங்களின் வர்ண நெகடிவ்கள் கொடுக்கப்படும்.

**நிபந்தனைகள்**

(அ) பெருப்பித்த புகைப்படங்கள் பட அட்டைகளில் ஒட்டப்பட்டு (மவுண்ட் செய்யப்பட்டு) இருபக்கம் பார்க்கக்கூடிய வகையில் பிளாஸ்டிக் உறைகளில் வழங்கப்படல் வேண்டும்.

(ஆ) தொழுநோய் தடை இயக்க அதிகாரியின் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களில், கேள்விகள் இரண்டு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(இ) மீளளிப்பு செய்யப்படும் கேள்வி வைப்புப்பணமாக ரூபா 10/- செலுத்தி அதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்தால் கேள்விப்படிவங்கள் 1973 மே மாதம் 31 ந் திகதி நண்பகல் 12 மணிவரையில் வழங்கப்படும். காசோலையாகின் கோட்டை, யோக் வீதி, இலங்கை வங்கியில் கணக்கு இலக்கம் 255 என்று எழுதப்படல் வேண்டும்.

(ஈ) 1973 ஜூன் 09 ம் திகதி நண்பகல் 12 மணிக்கு கேள்விகள் மூடப்படும். கேள்விகள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர்.

(உ) தொழுநோய் தடை இயக்க அதிகாரி காரியாலயத்தில் மேலதிக விவரங்களை அறிந்துகொள்ளவும், மூலப்படங்களின் வர்ண நெகடிவ்களைப் பார்வை இடவும் இயலும்.

டி. எஸ். பி. சபாபதி,
அதிபர்,
தொழுநோய் தடை இயக்கம்.

தொழுநோய் தடை இயக்க
அதிகாரி காரியாலயம்,
385, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10.
73.05.03.

5-356—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60.

---

**கல்வி அமைச்சு**

*விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்—1973*

விளையாட்டு உபகரணங்கள் விநியோகித்தற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 08.06.1973 ஆந் திகதி 10.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிள்ள கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 07.06.1973 ஆந் திகதி 3.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடது பக்க மேல் மூலையில் "விளையாட்டு உபகரணங்கள் விநியோகம்—1973" என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக்கொண்டு பெற்றமையை ஒப்புக்கொள்தற்கான அறிவித்தலைக் கொடுத்தற்கு அன்னருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100/- கட்டி, அப்பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு-2,
05.05.1973.

5-353—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

மஸ்கெலியா மின்தறி வேலைக்களத்தில் முள்ளுக்கம்பி வேலியமைப்பதற்குரிய கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973.06.06 ந் தேதி காலை பத்து மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் 10,000/- ரூபாவோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்களைப் பெற 1973.06.06 ந் தேதி நண்பகலோ, அதன் முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக்கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/49)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1—1973.05.07.

5–337—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**கல்வி அமைச்சு**

**விஞ்ஞான உபகரணங்கள் விநியோகம் 1973**

விஞ்ஞான உபகரணங்கள் உற்பத்தி செய்து விநியோகத்திற்கான கேள்விப் பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் கேள்விச் சபைத் தலைவரால் 08.06.1973 ஆந் திகதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள். அவைகள் கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் மேலுள்ள 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று, விதிக்கப்பட்ட நேரம் திறக்கப்படும்.

3. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சுக் காரியாலயத்தில் (விநியோகக் கிளையிலிருந்து) 07.06.1973 ஆந் திகதி 3.30 மணிவரை பெறற்பாலனவான படிவங்களில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டும்.

4. சகல கேள்விகளும் இணைப்படியில் தயாரிக்கப்பட வேண்டும். கேள்விப் பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறைகளின் இடது பக்க மேல்மூலையில் "விஞ்ஞான உபகரணங்கள் விநியோகம்—1973" என அடையாளமிடப்பட வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் அஞ்சல் மூலம் பதிவு செய்து அனுப்பப்படலாம். உள்ளூர்க் கேள்வியாளர் ஒருவர் தனது கேள்விப் பத்திரத்தை மேற்குறித்த முறையில் அனுப்ப விரும்பாவிடின், காகித உறையில் வைத்து முத்திரை பொறிக்கப்பட்ட தனது கேள்விப் பத்திரத்தை கேள்வியாளர் அல்லது அவருடைய முகவர் (காகித உறையின் மேல், 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாளமும் கேள்வியாளரின் பெயரும் விலாசமும் கொடுபட வேண்டும்) கல்வி அமைச்சின் அலுவலக உதவியாளரிடம் நேரில் கொடுக்கலாம். அதனைப் பெற்றுக்கொண்டு பெற்றமையை ஒப்புக்கொள்வதற்கான அறிவித்தலைக் கொடுப்பதற்கு அன்னாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

6. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சில் (கொடுப்பனவு கிளையில்) அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள யாதேனும் கச்சேரியில் கேள்வி வைப்புப் பணமாக ரூ. 100/- கட்டி அப்பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படலாம்.

7. விதிக்கப்படும் பிரகாரம் மாதிரிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் செயலாளருக்கு (விநியோகக் கிளைக்கு) விண்ணப்பித்து மேலதிக விபரங்களையும் நிபந்தனைகளையும் பெறலாம்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
05.05.1973.

5–354—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

றுவன்வெல மின்தறி வேலைக்களத்தில் காவலாளரின் குடிலொன்றைமைப்பதற்கும், பொறுப்பதிகாரியின் அறைக்கு உட்கூரையமைப்பதற்குமான கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973.06.06 ந் தேதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் ரூபா 5,000/- மோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்களைப் பெற 1973.06.05 ந் தேதி நண்பகலோ, அதற்கு முன்போ இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக்கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்

தொடர்பிலக்கம்: 3/1-(1/48)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1.
1973.05.07.

5–335—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

**சிறு கைத்தொழிற்றிணைக்களம்**

எட்டியாந்தோட்டை மின்தறி வேலைக்களத்தில் காவலாளரின் குடிலொன்றை அமைப்பதற்கும், பொறுப்பதிகாரியின் அறைக்கு உட்கூரையமைப்பதற்குமான கேள்விகளைக் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்திலுள்ள சிறு கைத்தொழிற்றிணைக்களக் கேள்விச் சபைத் தலைவர் 1973.06.06 ந் தேதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

2. எந்தவொரு அரசாங்க திணைக்களத்திலும் ரூபா 5,000/- மோ அதற்கு மேற்படவோவுள்ள கட்டிட வேலைகட்கெனப் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரர்கட்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும்.

3. விரும்பும் கேள்வியாளர்கள் கேள்விப்படிவங்களைப் பெற 1973.06.05 ந் தேதி நண்பகலோ, அதன் முன்போ. இத்திணைக்கள அலுவலகத்திலோ அன்றிக் கொழும்புக்கு வெளியேயுள்ள கச்சேரியெதிலுமோ கேள்விக்கட்டுப்பணமாக 25/- ரூபாவைச் செலுத்துதல் வேண்டும்.

சோமபால குணதீர,
சிறு கைத்தொழில் பணிப்பாளர்.

தொடர்பிலக்கம் : 3/1—(1/47)
சிறு கைத்தொழிற்றிணைக்களம்,
ஹேமாஸ் கட்டிடம்,
கொழும்பு 1—1973.05.07.

5–338—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

## கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

உபயோகிக்கப்பட்ட 10" விட்டமுள்ள 17,000 நீள அடி உருக்குக் குழாய்களைக் கொலன்னாவை எண்ணெய்ச்சாலையில் விற்பனை செய்வதற்கான கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுக் கேள்விச் சபைத் தவிசாளர் 1973.06.20 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

1973.06.20 திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புக் கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப்பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 200 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு ,சிருப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக்கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1973.06.18 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
18.05.1973.

5-383—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

## இலங்கைப் போக்குவரத்துச் சபை

கொழும்பு-5, கிருல வீதி, 200 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கேள்விப் பத்திரச் சபைத் தலைவர், 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதி மு. ப. 10.00 மணி வரை பின்வரும் வேலைகளுக்கான வேறான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.

| விவரணம் | ஒப்பந்தக்காரர்களின் ஆகக் குறைந்த பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| 1. தலங்கமை சாலை<br>6 வேலைக்குடாக்களும் 2 சேவைக் குழிகளும் அமைத்தல்-ஈசி/539 | 1,00,000.00 |
| 2. உடஹாமுல்ல சாலை<br>இடத்தை அகழ்தலும் மட்டமாக்குதலும்-ஈசி/545 | 25,000.00 |
| 3. பெண்டியமுல்லை சாலை<br>3 வேலைக்குடாக்கள், அலுவலகம், பண்டசாலை ஆகியன அமைத்தல்-ஈசி/403 | 25,000.00 |

பிரதம சிவில் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய பத்திரங்களில் கேள்விகள் இரட்டைப் பிரதிகளில் செய்யப்பட வேண்டும். இவரிடமிருந்து எல்லா விவரங்களையும் பெற்றுக் கொள்வதுடன் இவரின் அலுவலகத்தில் படவ்ரைவுகளையும் பரிசிலனை செய்யலாம். ஒவ்வொரு வேலைக்கும் எதிராகக் காட்டப்பட்ட தொகைக்காக இ. போ. ச. வில், அரசாங்கத் திணைக்களங்களில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களில் பதிவு செய்யப்பட்ட கொந்தராத்துக்காரர்கள், தேவையான கேள்விப் பத்திரச் சாதனங்கள் வழங்கப்படுவதற்காக 1 ஆம், 2 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு, ஒவ்வொன்றுக்கும் ரூபா 100 க்குமான மீளளிக்கப்படக்கூடிய கேள்விப் பத்திரக் கட்டுப்பணப் பற்றுச்சீட்டையும், மீளளிக்கப்படமாட்டாத கேள்விப் பத்திரக் கட்டணமாக 1 ஆம், 2 ஆம், 3 ஆம் விடயங்களுக்கு ரூபா 25 க்குமான பற்றுச் சீட்டையும் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 5 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது முன்னதாக பிரதம சிவில் பொறியியலாளருக்கு காட்டுவதன் பேரில் கேள்வியிடத் தக்வுடையவர்களாயிருப்பார்கள். கேள்வியிடுபவர்கள் தங்களது சான்றோலைகளைப் பரிசோதனைக்குக் காட்டவேண்டும். அவ்வித சான்றோலைகள் பிரதம சிவில் பொறியியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே கேள்விப் பத்திரக் கட்டுப்பணத்தை காசாக மாத்திரம் பிரதம கணக்காள உத்தியோகத்தரிடம் கட்டலாம்.

பிரதம சிவில் பொறியியலாளர்,
இலங்கைப் போக்குவரத்துச் சபை.

200, கிருல வீதி,
கொழும்பு-5.

5-403—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

## வவுனியா மாவட்டத்தில் முல்லைத்தீவு வாடி வீட்டில் திருத்தங்கள் செய்வதற்கான கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்

19.4.73 ந் திகதிய 56 ம் இலக்க ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின், பகுதி I தொகுதி (II ஆ) ல் (404 ம் பக்கம்—4-573) பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. வவுனியா மாவட்டத்தில் மேற்படி கட்டிடத்திலுள்ள திருத்த வேலைகளைச் செய்வதற்காக 1973 ம் ஆண்டு மே மாதம் 10 ந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் கீழ் ரூ. 15,000 (பதினையாயிரம்) பெறுமதி வாய்ந்த கட்டிடங்களில் வேலைகளைச் செய்வதற்காக பதிவு செய்துகொண்ட கொந்தராத்துக்காரர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள், வவுனியா கச்சேரி கேள்விப் பத்திரச் சபைத் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2. கேள்விப் பத்திரப் படிவங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 24 ம் திகதி நண்பகல் 12 மணி வரைக்கும் வவுனியா கச்சேரியினால் வழங்கப்படும். இப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள வரும் பொழுது, கொந்தராத்துப் பதிவுப் புத்தகத்தையும் கொண்டு வருதல் வேண்டும்.

3. 3 ம், 5 ம், 6 ம், 7 ம் பந்திகள் யாவும், 19.4.73 ந் திகதிய 56 ம் இலக்க ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பகுதி I, தொகுதி (II ஆ) ல் (404 ம் பக்கம்—4-573) பிரசுரிக்கப்பட்டவை போலாகும்.

4. கேள்விப் பத்திரங்கள் 25 ந் திகதி மே மாதம் 1973 ம் ஆண்டு மு. ப. 10.45 மணிக்கு, வவுனியா கச்சேரியில் திறக்கப்படும்.

எல். பி. விக்கிரமாராச்சி,
வவுனியா அரசாங்க அதிபர்.

அரசாங்க அதிபர் அலுவலகம்,
வவுனியா,
1973.05.07.

5-392—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

**வவுனியா மாவட்டத்தின் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ள கட்டிடங்களில் திருத்த வேலைகளைச் செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் கோருவதற்கான அறிவித்தல்**

*19.4.73 ந் திகதிய 56 ம் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I தொகுதி (II ஆ) ல் (404 ம் பக்கம்—4-575) பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. வவுனியா மாவட்டத்தில் மேற்படி கட்டிடத்தில் உள்ள திருத்த வேலைகளைச் செய்வதற்காக 1973 ம் ஆண்டு மே மாதம் 25 ந் திகதி மு. ப. 10.30 மணி வரைக்கும் ஏதாவது ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் கீழ் ரூ. 10,000.00 (பத்தாயிரம்) பெறுமதிவாய்ந்த கட்டிடங்களின் வேலைகளைச் செய்வதற்காகப் பதிவு செய்து கொண்ட கொந்தராத்துக்காரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள், வவுனியா கச்சேரி கேள்விப்பத்திரச் சபையின் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கேள்விப் பத்திரப் படிவங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி பகல் 12.00 மணி வரைக்கும் வவுனியா கச்சேரியினால் வழங்கப்படும். இப்படிவங்களைப் பெற்றுக்கொள்ள வரும்பொழுது கொந்தராத்துப் பதிவுப் புத்தகத்தையும் கொண்டுவருதல் வேண்டும்.*

*3. 3 ம், 5 ம், 6 ம், 7 ம் பந்திகள் யாவும், 19.4.73 ந் திகதிய 56 ம் இலக்க ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின், பகுதி I, தொகுதி (II ஆ) ல் (404 ம் பக்கம்—4-575) பிரசுரிக்கப்பட்டவை போலாகும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 25 ந் திகதி மே மாதம் 1973 ம் ஆண்டு மு. ப. 11.00 மணிக்கு வவுனியா கச்சேரியில் திறக்கப்படும்.*

*எல். பி. விக்கிரமாராச்சி,*
*வவுனியா அரசாங்க அதிபர்.*

*அரசாங்க அதிபர் அலுவலகம்,*
*வவுனியா, 1973.05.07.*

5-393—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

---

# கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்

**பொலிஸ் திணைக்களம்**

*கொம்பனி வீதியில் உள்ள பொலிஸ் தடுப்புக் காவல் நிலையத்தில் உள்ள கள்ளக்குடியேற்றக்காரருக்கு சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களின் பெறுபேறுகள்*

(அ) கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்களின் தொகை : 3

(ஆ) வெற்றிபெற்ற கேள்விப்பத்திரகாரரின் பெயர் :—
ஜனுப் நாகூர் மீரா ஜெனுல் ஆப்தீன், இல. 42, குமாரன் ரத்தினம் வீதி, கொம்பனித் தெரு கொழும்பு 2.

(இ) பெற்றுக் கொள்ளப்பட்ட விகிதங்கள் :—

| | ஒரு உணவின் விலை |
|---|---|
| (அ) காலை உணவு .. .. .. .. .. | 36 |
| (ஆ) மதிய உணவு | |
| (i) ஒரு கிழமையில் மூன்று நாட்களுக்கு ஒரு சம்பலுடனும் இரண்டு மரக்கறியுடனும் சோறு | 85 |
| (ii) இரண்டு நாட்களுக்கு இரண்டு மரக்கறியுடனும் கருவாட்டுடனும் சோறு .. | 85 |
| (iii) இரண்டு நாட்களுக்கு இரண்டு மரக்கறியுடனும் மீனுடனும் சோறு .. | 85 |
| (இ) பிற்பகல் தேநீர் அல்லது கோப்பி .. .. .. | 10 |
| (ஈ) இரவு உணவு .. .. .. .. .. | 48 |
| நோயாளர்கட்கு உணவு .. .. .. .. | 80 |

வி. ராசசிங்கம்,
கணக்காளர்,
கொழும்பு பொலிஸ் அதிபருக்காக.

பொலிஸ் காரியாலயம்,
எச்சலம் சதுக்கம்,
கொழும்பு 1,
4.5.73

5—363—18.05.73—ந் திகதிய வர்த்தமானி இல. 09

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

*எனது இல. எம்என்சி/ஏ/6/73.*

*சுங்க விற்பனை*

*1973 ம் ஆண்டு மே மாதம் 26 ம் திகதி காலை 9.00 மணிக்கு மன்னார் சுங்கப் பணிமனையில் கீழே குறிப்பிட்ட பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும்.*

*ஏல விற்பனைக்கு முன் எந்நாளிலாவது விற்பனைக்குரிய பொருட்களைப் பரிசீலனை செய்துகொள்ளலாம்.*

*விற்பனை செய்யப்பட்ட பொருட்கள் யாவும் விற்பனைக்குப்பின் உடனடியாக காவியாக்கப்படல் வேண்டும்.*

*ச. கதிர்காமநாதன்,*
*சுங்க சேகரிப்பாளர்,*
*மன்னார்.*

*சுங்கப் பணிமனை,*
*மன்னார்.*
*26.04.73.*

*1. 2 கராம்பு மூடைகள்—128 இருத்தல்.*
*2. 1 பாக்கு மூடை — 56 இருத்தல்*

5-359—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60

*ஏல விற்பனை*

*ஐந்து இரு சாதி எருதுகள், கோப்பாய் திறந்த வெளிச்சிறைச்சாலையில் 73.6.6 முற்பகல் 10 மணிக்கு பிரசித்த ஏலத்தில் விற்கப் படும். விற்பனை முடிந்ததும் பணம் கட்டி மாடுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். கிழமை நாட்களில் சாதாரண காரியாலய நேரங்களில் மாடுகளை கோப்பாய் திறந்த வெளிச் சிறைச்சாலையில் பார்வையிடலாம்.*

*க. தங்கராசா,*
*சிறைச்சாலை அதிபர்.*

*யாழ்ப்பாணம்,*
*27.4.73.*

*5-386—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60*

---

## ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும்

*காரைநகர்-ஊர்காவற்றுறை ஆய சேவை*

*1973 ம் ஆண்டு ஜூலை 1 ம் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு டிசம்பர் 31 வரை*

*1973 ம் ஆண்டு ஜூலை 1 ம் திகதியிலிருந்து 1973 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி கால எல்லைவரை காரைநகர்-ஊர்காவற்றுறை ஆய சேவைக்கான குத்தகைக் கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி காலை 10 மணி வரைக்கும் யாழ்ப்பாணக் கச்சேரியில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. கேள்விகளுக்குரிய விண்ணப்பப் பத்திரங்கள் யாழ்ப்பாணக் கச்சேரியில் ரூபா 100/- கட்டிப் பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திரங்கள் இரு பிரதியில் இருக்க வேண்டும். வெற்றி பெற்ற குத்தகைக்காரர் உரிய காலத்திற்குள் பிணைப்பணத்தைக் கட்டத்தவறினால் அல்லது ஒப்பந்தத்தை கைச்சாத்திடத் தவறினால் முன் கட்டிய பணத்தை இழக்க வேண்டியும் அவருடைய பெயர் தவறுனர் உத்தரவுச் சீட்டு நிரலில் சேர்க்கப்பட்டுவிடும். இவற்றைத் தவிர்ந்த ஏனைய கேள்வியாளரின் கட்டுப்பணம் வெற்றி பெற்ற விற்பனையாளர் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டு பிணைப்பணம் கட்டியபின்பு திருப்பிக் கொடுக்கப்படும்.*

*3. ஒவ்வொரு கேள்விப்பத்திரமும் பொறியிட்ட காகித உறைக்குள் வைக்கப்பட்டு 1973 ம் ஆண்டு மே மாதம் 31 ந் திகதி காலை 10 மணிக்கு முன் எனது காரியாலய உதவியாளரிடம் யாழ்ப்பாணக் கச்சேரியில் நேரில் சமர்ப்பிக்கலாம்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1973 ம் ஆண்டு மே மாதம் 31 ம் திகதி காலை 10 மணிக்கு எனது காரியாலய உதவியாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும். அத்தருணம் கேள்வியாளர்கள் சமூகமளிக்கலாம்.*

*5. மேற்கூறப்பட்ட நாள் நேரத்துக்குப் பிந்திக்கிடைக்கும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*6. கேள்வியாளர்கள் இச்சேவையை நடத்துவதற்கென விதிமுறைகளை யாழ்ப்பாணக் கச்சேரியில் பார்வையிடலாம். காரைநகர் கரையிலிருந்து ஊர்காவற்றுறைக்கு நேராகச் செல்பவர் தவிர்ந்த மற்றையவர்களிடம் ஆயக்குத்தகை அறவிடமுடியாது.*

*7. நியமனம் பெற்ற கேள்வியாளர் கேள்வித் தொகையில் பத்தில் ஒரு பங்கை முற்பணமாக உடனே செலுத்தவேண்டும். கேள்வித் தொகையில் அரைவாசியைக் காணிப் பிணையாகவும் அல்லது மூன்றில் ஒரு பங்கை காசுப் பிணையாகவும் கேள்விகள் ஏற்றுக்கொண்ட 10 நாட்களுக்குள் பிணைப்பணமாகச் செலுத்த வேண்டும்.*

*8. நியமனம் பெற்ற கேள்வியாளர் தாங்கள் பிணையாகக் கொடுக்கும் காணிகளின் உறுதிகளைப் பார்வையிடுதல் உறுதிச் சீட்டுவரைதல் காணிகள் மதிப்பிடுதல் உறுதிச் சீட்டுப்பத்திரத்துக்குரிய முத்திரைச்சட்டத்தின் கீழ் தீர்மானித்தல் முதலிய வேலைகளுக்கு முடிக்குரிய பிரக்கிராசியாருக்கு கொடுக்க வேண்டிய போதிய பணத்தையும் செலுத்தவேண்டும்.*

*9. பிணையாகக் கொடுக்கும் ஒவ்வொரு உறுதிகளுடனும் அக் காணிகளில் வில்லங்கம் அல்லது கடன் எதுவும் இல்லையென்று உறுதிப் படுத்தும் காணிப்பதிவாளரின் பத்திரம் இணைக்கவேண்டும். பிணைகட்டுபவரே மேற்கூறிய பத்திரம் பெற்றுக்கொள்வதற்குரிய செலவும் கொடுக்க வேண்டும்.*

*10. கேள்விகள் எதுவும் கிடைக்காவிட்டால் அல்லது கிடைத்த கேள்விகள் திருப்திகரமாக இல்லாவிட்டால் ஆயக்குத்தகை கேள்விப்பத்திரங்கள் திறந்த அன்றே ஏலவிற்பனைக்கு விடப்படும்.*

*11. அரசாங்க அதிபர் எந்தக் கேள்வியையும் அல்லது எல்லாவற்றையுமோ எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்க உரிமை உண்டு.*

*12. நியமனம் பெற்ற கேள்வியாளர் இலங்கைத் தொழிலாளர்களையே வேலைக்கு அமர்த்தல் வேண்டும்.*

*13. ஆயக்குத்தகை நடாத்துபவர் இலங்கைத் தொழிலாளர்களையே அமர்த்த வேண்டும். இது ஆயக்குத்தகை விதிமுறைகளில் ஒன்றாக இருக்கும். இந்த விதியை மீறு நியமனம் பெற்ற கேள்வியாளர் ஆயக்குத்தகை உரிமையை இழக்கவேண்டி நேரிடும். திறைசேரியின் அனுமதியுடன் அரசாங்க அதிபர் இலங்கையர் அல்லாதாரை குறிப்பிட்ட காரணங்களுக்காக வேலைக்கு அமர்த்த எழுத்து மூலம் அனுமதிபெறுமல் இலங்கையரல்லாதாரைச் வேலைக்கமர்த்தக்கூடாது.*

*14. இன்னும் மேற்கொண்டு விபரங்களை வேண்டுவோர் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கு மனுப்பண்ணிப் பெற்றுக்கொள்ளலாம்.*

*எம். ரி. டபிள்யூ. அமரசேகர,*
*யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.*

*கச்சேரி,*
*யாழ்ப்பாணம்,*
*07.05.1973.*

*5-394—18.05.73 ந் திகதிய வர்த்தமானி இல. 60*

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப் படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏறபடும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட்ட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொளளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான **பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினுல்** ஏற்றுககொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய **அதிபரால்** ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| மே ... | 4.5.73 | வெள்ளி .. | 25.4.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 11.5.73 | வெள்ளி .. | 2.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 18.5.73 | வெள்ளி .. | 9.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 25.5.73 | வெள்ளி .. | 15.5.73 | செவ்வாய் .. | ந.ப. 12.00 |
| ஜூன் ... | 1.6.73 | வெள்ளி .. | 23.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 30.5.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 6.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 13.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 20.6.73 | புதன் .. | ந.ப. 12.00 |

**எஸ். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ௵ ஒகத்து ௴ 18 ந உ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது